# முரசொலி

பக்கங்கள் நான்கு — விலை ரூபா; 5-00

முரசு 06 ஒலி 206 ஆங்கீரச ஆனி 06 (20.06.1992) சனி


## பதுக்கலுக்கு அபராதம்: காவல்துறை எச்சரிக்கை

பதுக்கல் வியாபாரிகள் குறித்து விழிப்பாக இருக்குமாறும். இத்தகையவர்கள் குறித்து பொதுமக்கள் அருகிலுள்ள தமிழீழ காவல் நிலையங்களுக்கு தகவல் தருமாறும் தமிழீழ காவல்துறை பொறுப்பாளர் நடேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார் மண்ணெண்ணெய் பதுக்கலில் சில வர்த்தகர்கள் ஈடுபட்டுள்ளனர். மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டிற்கு எந்தக்காரணமும் இல்லை மண்ணெண்ணெ போதியளவு கையிருப்பில் உண்டு எனக் குறிப்பிட்டுள்ள காவல்

—04 ஆம் பக்கம் பார்க்க

# இனப் பிரச்சினை தீர்வுத் திட்டமாக

# வடக்கு, கிழக்கு மாகாண குழுக்கள்

## இணைப்பை நிராகரித்து தெரிவுக்குழு புதியதிட்டம்

இனப்பிரச்சினை தீர்வுக்காக அமைக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு பிரச்சினைக்கு தீர்வாக முன்வைத்துள்ள திட்டங்கள் வெளியிடப்பட்டுள்ளன:

★ வடக்கு கிழக்கு மாகாணங்களுக்குத் தனித்தனியாக வெவ்வேறான மாகாண குழுக்கள் அமைக்கப்படும்.

★ இந்த இரு மாகாணக் குழுக்களிலும் உள்ள மக்களால் தேர்தலில் தெரியப்படும் உறுப்பினர்கள் பின் ஒன்று கூடி ஒரு மேல் நிலை குழுவை(APEX) அதற்கான பிரதிநிதிகளை தெரிவு செய்வர்

இந்த மேல் நிலைக்குழு எப்படிச் செயற்படும், என்ன அதிகாரங்கள் உடையது, எங்கு நிலைகொண்டிருக்கும் என்ற விவரங்கள் தெரிவுக் குழுவினால் இம்மாத இறுதியில் தெரிவிக்கப்படும். அண்மையில் கொழும்பிலுள்ள தமிழ் கட்சிகள் தமது 4 அம்ச திட்டத்தை தெரிவுக்குழுவிடம் சமர்ப்பித்த

... 04 ஆம் பக்கம் பார்க்க

## இணைப்பு இல்லாத்திட்டத்தை ஏற்க தமிழ்கட்சியினர் மறுப்பு

பாராளுமன்றத்தெரிவுக்குழு முன்வைத்துள்ள திட்டங்களை நாம் ஏற்க முடியாது என நிராகரித்து விட்டதாக கொழும்பிலுள்ள தமிழ்க்கட்சிகள் நேற்று அறிவித்துள்ளன

தமது 4 அம்ச திட்டத்தில் உள்ளதும் அதிகமாக வலியுறுத்தப்படுவதுமான 'இணைப்பு' என்ற பதமே இந்த திட்டத்தில் இல்லை எனச் சுட்டிக் காட்டியுள்ள தமிழ்க்கட்சிவட்டாரங்கள், இணைப்பு குறித்து தெரிவிக்கப்படாத எந்த திட்டத்தையும் ஏற்பதில்லை என தம்மிடையே இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தன

இதனிடையே தெரிவுக்குழுவின் இப்புதிய திட்டம் குறித்து முஸ்லிம் காங்கிரஸ் இதுவரை எதுவும் தெரிவிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது

## சிங்கள தேசியவாதிகளை திருப்திப்படுத்தும்புதியதிட்டம்

பாராளுமன்றத் தெரிவுக்குழு இனப்பிரச்சினை தீர்வாக தற்போது முன்வைத்துள்ள திட்டம் சிங்கள தேசியவாதிகளை திருப்தி செய்யும் என பி.பி.ஸி நேற்று குறிப்பிட்டது.

சிங்கள தேசியவாதிகளை பொறுத்தவரையில் புதிய திட்டத்தில் இணைப்பு நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஆனால் அதேசமயம் தமிழ் மக்களை பொறுத்தவரையில் மேல்நிலை குழுமூலம் தன்னாட்சி கிடைப்பதாக தெரிவுக்குழு சமாதானம் கூறிக்கொள்ள முடியும் என பி.பி.ஸி, மேலும் தெரிவித்தது.

## கப்பலில் மண்ணெண்ணெயை தருவிக்க அரசஅதிபர் ஏற்பாடு

குடாநாட்டின் தேவைகளுக்கு உடனடியாக மண்ணெண்ணெயை அனுப்பி வைக்குமாறு யாழ் அரசாங்க அதிபர் நேற்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருக்கு அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்

சுமார் ஆயிரம் பரல்கள் மண்ணெண்ணெயை கப்பலில் அனுப்பி வைக்குமாறும் அரசாங்க அதிபர் கேட்டுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன

அடுத்த கிழமையளவில் சிறிய கப்பலில் மண்ணெண்ணெய் பருத்தித்துறைக்கு எடுத்துவரப்படும் எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

47.06

## கலிபோர்னியா பல்கலைகழகத்தில் தமிழ்மொழித்துறை உருவாக்கம்

அமெரிக்க கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் புதிதாக தமிழ்மொழித்துறை உருவாக்கப்படவுள்ளது

இதற்கென அமெரிக்காவாழ் தமிழர்கள் ஒரு கோடி ரூபா நிதி அறக்கட்டளை ஒன்றையும் தாபித்துள்ளனர்

அண்மையில் வட அமெரிக்க தமிழ் சங்கங்களின் ஆண்டுக் கூட்டம் நடைபெற்றது கலிபோர்னிய பல்கலைக்கழக தமிழ்த்துறை ஒரு வரலாற்று முக்கியமான ஒன்றென இதில் உரையாற்றிய தமிழ்ச்சங்கங்களின் தலைவர் பேகல் பாண்டியன் குறிப்பிட்டார்

கூட்டத்தில் உரையாற்றிய மதுரைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைப்பட்டம் பெற்ற அமெரிக்கரான ஜோர்ஜ் ஹாட் தற்போதைய தமிழ் மொழி. கலாசாரம் என்பவற்றை உலகிற்கு வெளிப்படுத்தவும் உலகின் பழைய மொழிகளில் ஒன்றான தமிழை உலகமெமுழுவதும் பரவச்செய்யவும்வேண்டிய தான அவசியத்தை வற்புறுத்தினார்

## யுத்த அழைப்பு குடாநாட்டில் ஒலிப்பு

'தமிழீழ திசையெங்கும் போர் மூண்டுவிட்டது. திருமலையில் போர் மன்னாரில் போர் மணலாற்றில் போர், பலாலியில் போர் இன்னுமா தமிழா தூக்கம் பொறிக்கும் விழியோடு புலியாகி போராட நாட்டுக்காக புறப்படுவோம்"

இவ்வாறு குடாநாடு எங்கும் ஒலிபெருக்கிமூலம் யுத்த அழைப்பு விடுக்கப்பட்டு வருகிறது.

## ★ அமைச்சர் சவான் சொல்கிறார்

## ராஜீவ் கொலையில் பாகிஸ்தான் பின்னணியாம்

ராஜீவ் காந்தி கொலையில் விடுதலைப்புலிகளுடன் பாகிஸ்தான் உளவுப்பிரிவு சம்பந்தப்பட்டிருக்கலாமென இந்திய உள்துறை அமைச்சர் எஸ் பி சவான் 'பிளிற்ஸ' என்ற இந்திய பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

புலிகள் தனித்து செயற்படவில்லை எனவும் வெளி ஆதரவு உள்ளது எனவும் அவர் அப்பேட்டியில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## அவுஸ்திரேலியாவில் உலகின் மிகப் பெரிய பற்றீரியா

உலகில் மிகப்பெரிய பற்றீரியா ஒன்று அவுஸ்திரேலியாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வழமையான பற்றீரியாவைவிட இது 10 லட்சம் மடங்கு பெரியது எனவும் இதை நுணுக்குக்காட்டியில்லாமலேயே பார்க்க முடியும் எனவும் சிட்னி பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

... 04 ஆம் பக்கம் பார்க்க

## ஊரடங்கு நீக்கம்

யாழ்.மாவட்டத்தில் நேற்று முன்தினம் அமுல்செய்யப்பட்ட ஊரடங்குச்சட்டம் 24மணிநேரத்தில் நேற்றுக் காலை 6மணியுடன் நீக்கப்பட்டுள்ளதாக கூட்டுப்படைத் தலைமையகம் தெரிவித்தது

## ஹெலி நோட்டம்

நேற்று நண்பகல் 12 மணியளவில் யாழ் நகரின் கரையோரப் பகுதிகளை ஹெலிகொப்டர் ஒன்று பல தடவை நோட்டமிட்டு சென்றது. 15

## பிரேத பரிசோதனைக்காக சடலம் ஒப்படைப்பு

மூளாய் தெற்கில் வீட்டில் மரணக்கிரியை முடிவுற்று பிரேத ஊர்வலம் மேற்கொள்ளும் வேளையில் அப் பிரேதத்தை காவல்துறையினர் பாரமெடுத்து பிரேத பரிசோதனைக்காக யாழ் வைத்திய சாலையில் நேற்று ஒப்படைத்துள்ளனர்.

க. நாகேந்திரம் (34) என்பவர் சிலதினங்களுக்கு முன் விபத்தொன்றில் காயமடைந்து யாழ். பெரியாஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு பின்னர் தாமாகவே வெளியேறி வீட்டுக்குச்சென்றார்

நேற்று முன்தினம் அவர் திடீரென நோய்வாய்ப்பட்டு மரணமானதாக தெரிவிக்கப்பட்டது. (07)

## பதுக்கிய மண்ணெண்ணெய் புலிகளிடம் அகப்பட்டது

போர்க்காலநெருக்கடிநிலையைச்சாதகமாகக் கொண்டு மண்ணெண்ணெயைப் பதுக்கி வைத்துக் கொள்ளையாபமடிக்கமுயன்ற நடைபாதை வியாபாரி ஒருவர் விடுதலைப் புலிகளின் கண்காணிப்புப் பிரிவினரிடம் வகையாக மாட்டிக் கொண்ட சம்பவம் நேற்று முன்தினம் யாழ் தட்டாதெருச் சந்தியில் இடம் பெற்றது.

திடீர்ச்சோதனை மேற்கொண்ட கண்காணிப்புப் பிரிவினர் சம்பந்தப்பட்ட வியாபாரியிடமிருந்து 25 பரல்கள் மண்ணெண்ணெயைக் கைப்பற்றியதுடன் நேற்று அவ்விடத்திலேயே வைத்து பாவனையாளர்களுக்கு கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்தனர்.

# சிங்கள மீனவக் குடியேற்றம் மணலாறில் விஸ்தரிப்பு

மணலாறில் கொக்குத்தொடுவாய் வரையிலான கரையோரப் பிரதேசங்களில் சிங்கள மீனவக் குடியேற்றங்கள் விஸ்தரிக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அப் பகுதியில் சிங்கள மீனவர்களுக்கு குடியிருப்புக்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டு தொழிற் கருவிகள் வழங்கப்பட்டு, குடியேறுவதற்கான வசதிகள் அரசினால் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றது.

அப்பகுதியில் குடியேறும் சிங்கள மீனவர்களுக்கு துப்பாக்கிகளும் வழங்கப்பட்டுள்ளன.

மணலாற்றின் தென்னைமரமாவடி முதல் கொக்குத்தொடுவாய் வரையிலான கரையோரப்பிரதேசங்களிலேயே இம் மீனவக் குடியேற்றங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

மணலாற்றுக் கரையோரங்களில் தற்காலிகமாக மீன் பிடிக்க வரும் சிங்கள மீனவர்களுக்கும் மேலதிக வசதிகள் வழங்கப்படுவதன் மூலம் அங்கு குடியேற்றப்பட்டு வருகின்றது.

இதைவிட மணலாற்றின் விவசாய நிலப்பரப்புகளிலும் சிங்களவர்கள் தீவிரமாகக் குடியமர்த்தப்பட்டு வருகின்றனர்.

75 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்புடைய மணலாறை முழுமையாக சிங்களமயமாக்குவதன் மூலம் அதனை அனுராதபுர நிர்வாக மாவட்டத்தின் கீழ் கொண்டுவர முயற்சிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## அஞ்சல் ஓட்டப் போட்டி

யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவனான வி. ரி. மாலிங்கம் நினைவாக யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையேயும், யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயும் யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் அஞ்சல் ஓட்டப் போட்டியொன்றை நடத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பான அறிவித்தல்கள் விரைவில் வெளியிடப்பட உள்ளதாக சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத் தலைவர் தெரிவித்தார். 15

## பரிசளிப்பு விழா

சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 1 30 மணியளவில் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. 18

## விளையாட்டு விழா

தமிழீழ விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கத்தினர் வெகு விரைவில் 'விளையாட்டு விழா' ஒன்றினை நடத்தவுள்ளனர்.

இவ் விழாவை முன்னிட்டு உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம், அஞ்சல் ஓட்டம், சைக்கிள் ஓட்டம், தாச்சி முதலான போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இப் போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் பாடசாலைகளுக்கூடாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தாச்சிப் போட்டி மாத்திரம் 13 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கிடையே நடைபெறும். 18

# தினமும் ஒரு ரூபா வழங்கி யாழ். வர்த்தகர்கள் உதவுவர்

ஊனமுற்றோர் நலனுக்காக தினமும் ஒரு ரூபா வீதம் உண்டியலில் சேகரிக்கும் புதிய திட்டத்தை யாழ் வர்த்தகர்கள் நடைமுறைப் படுத்தவுள்ளனர்.

யாழ். ஊனமுற்றோர் புனர்வாழ்வுக் கழகத்தின் வேண்டுகோளைத் தொடர்ந்து இப் புதிய முறையில் நிதி திரட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது. (14)

# ஊனமுற்றவர்களுக்கு கதிரை பின்னும் பயிற்சி

ஊனமுற்றவர்களுக்குத் தொழிற் பயிற்சியளித்து வேலைவாய்ப்புப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை ஊனமுற்றோர் புனர்வாழ்வுக்கழகம் மேற்கொண்டு வருகின்றது.

இதன் முதற் கட்டமாக ஊனமுற்றவர்களுக்குக் கதிரை பின்னும் பயிற்சியளிக்கப்பட்டு பயிற்சி முடிந்ததும் யாழ் செயலகத்தில் பழுதடைந்த கதிரைகளைத் திருத்தும் வேலையில் அவர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். (14)

# உடமைகளை மீட்டெடுக்க உதவுமாறு கோரிக்கை!

வலிகாமம் பகுதியிலிருந்து கடந்த சில தினங்களாக இடம் பெயர்ந்துள்ள மக்கள் அப் பகுதியிலுள்ள தமது அத்தியாவசிய உடமைகளை மீட்டெடுக்க உதவுமாறு யாழ் அரச அதிபர் மூலமாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தைக் கோரியுள்ளனர்.

திடீர் இராணுவ நடவடிக்கையினால் இவர்கள் தமது உடமைகளை கைவிட்டு விட்டு, உயிர் தப்பி வந்து தற்பொழுது அகதிகளாகத் தங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# தெரிவுக்குழு அமைக்கப்பட்டு ஆகஸ்டுடன் ஒரு வருடம்!

இனப் பிரச்சினைத் தீர்வுக்கென அமைக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்துடன் ஒரு வருடம் பூர்த்தியாகிறது.

இத் தெரிவுக்குழு தனது சிபாரிசினை வெளியிட காலம் தாழ்த்துவதாலும், முக்கிய தமிழ்த் தீவிரவாத அமைப்பான விடுதலைப் புலிகள் இயக்கத்தின் யோசனையைப் பெற முயலாததினாலும் இக் குழுவின் மீதான தமிழர்களின் நம்பிக்கை தற்போது ஊசலாடிக்கொண்டிருப்பதாக அவதானிகள் தெரிவித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# சுவரொட்டித் தடைக்கு தமிழகத்தில் கண்டனம்

தமிழகத்தில் பொதுக்கட்டிடங்கள் மற்றும் தனியார் கட்டிடச் சுவர்களில் சுவரொட்டி ஒட்ட தடைவிதிக்கப்பட்டுள்ளமை எதிர்க்கட்சிகளின் உரிமைகளைப் பறிக்க முயல்வதாகுமென இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஆளும்கட்சியின் தவறான கொள்கைகளையும், செயல்களையும் மக்கள் மத்தியில் எடுத்துச் சொல்லும் ஜனநாயக உரிமையைப்பறிப்பதாக இத்தடை இருப்பதாகவும் இதனை உடனே வாபஸ் பெற வேண்டுமெனவும் மேற்படி கட்சி தெரிவித்துள்ளது.

# பிராந்திய ராஜீய சபையை அமைப்பது குறித்து ஆலோசனை

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சியில் பிராந்திய ராஜீய சபை என்னும் புதிய அமைப்பை உருவாக்கும் யோசனை தற்பொழுது அரசியற்கட்சிகளிடையே முன் வைக்கப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்தியொன்று தெரிவிக்கிறது.

இந்தயோசனை தொடர்பாக ஒரு சில தினங்களில் தமிழ் அரசியற் கட்சிகள் கொழும்பில் கூடி ஆராயவுள்ளதாகவும் அறியப்படுகிறது.

## மருதங்கேணி பிரதேசப் போட்டிகள்

வடமராட்சி கிழக்கு - மருதங்கேணி பிரதேச செயலகத்தின் தொழிற்பரப்பு எல்லைக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டிகள் இம்மாதம் 22, 23 ஆம் திகதிகளில் மாமுனை சவைமன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவிருக்கின்றது (25)

## மெய்வல்லுநர் போட்டி

கூட்டுறவுதின விழாவை முன்னிட்டுப் பிராந்திய ரீதியில் மெய்வல்லுநர் போட்டிகளை நடத்துவதென்று யாழ். மாவட்ட இக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் பிராந்திய சபைத் தலைவர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது (14)

## வழமையான சேவை

கொழும்பில் கடந்த சில தினங்களுக்குப் பின்னர் மீண்டும் தனியார் பஸ் சேவை சீரடைந்துள்ளது.

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் சேவையில் ஈடுபட்டு வந்த மினிபஸ்களின் ஊழியர்கள் தமது வேலை நிறுத்தத்தைக் கைவிட்டுள்ளதையடுத்தே இச் சேவை தற்போது சீரடைந்துள்ளது.

# யூலை 11 முதல் 15 வரை கொழும்பில் ஆடிவேல்

கொழும்பில் ஆடிவேல் திருவிழாவை இம்முறையும் வழமைபோல் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யூலை மாதம் 11 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை ஆடிவேல் திருவிழா இடம் பெறவுள்ளது.

ஆடிவேல் திருவிழாவில் கலந்துகொள்வதற்கு வழமைபோல இம்முறையும் இந்தியாவிலிருந்து பல்வேறு கலைஞர்கள் கொழும்பு வரவுள்ளனர்.

# 14 வருடங்கள் பாவிக்கக்கூடிய புதிய மின் குமிழ்

தொடர்ந்து பதின்நான்கு வருடங்கள் பாவிக்கக்கூடிய மின்குமிழ் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த மின்குமிழ்கள் தற்பொழுது பாவனையிலுள்ள மின்குமிழ்கள் எடுக்கும் மின்சார அளவின் 25 சதவீதத்தை மட்டுமே எரிவதற்கு எடுக்கும்.

கலிபோர்னியாவிலுள்ள தொழில் நுட்பநிறுவனமொன்று இதனைக் கண்டுபிடித்துள்ளது.

அடுத்தவருடம் சந்தைக்கு வரவுள்ள இந்த மின்குமிழின் விலை 20 டொலர்களாகும். இலங்கைப் பெறுமதியில் சுமார் 800 ரூபா!

# தொடரும் கடும் காற்றினால் வாழைமரங்களுக்கு பெரும் சேதம்!

தற்போது வீசிவரும் கடும் காற்றினால் குடாநாட்டில் வாழைமரங்கள் பல முறிந்துள்ளன.

சென்ற மாதம் வீசிய கடும் காற்றினாலும் வாழைமரங்கள் பெருமளவில் முறிந்து விவசாயிகளுக்கு பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தியிருந்தன. 47

# வழக்கறிஞர்களின் வாதம் இனி எழுத்து மூலமே!

அமெரிக்காவில் உள்ளதைப் போல் வழக்கறிஞர்கள் தமது வாதத்தை எழுத்து மூலம் நீதிமன்றத்தில் அளிக்கும் முறை இந்தியாவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது

நீதிமன்றங்களில் வழக்கறிஞர்களின் வாய்மூலமான வாதத்தினால் ஏற்படும் கால தாமதத்தை தடுக்கும் முகமாகவே இப் புதிய சட்டம் இந்தியாவிலும் அமுலாக்கப்படவுள்ளது.

இதன்படி ஒரு வழக்கின் முக்கிய சாராம்சத்தை வாய் மூலம் எடுத்துக்கூற வழக்கறிஞர்களுக்கு 30 நிமிட நேரம் மட்டுமே வழங்கப்படும்.

# கூட்டுறவு விழாவை முன்னிட்டு மாவட்ட ரீதியில் பல்வேறு போட்டிகள்

இவ்வாண்டு சர்வதேச கூட்டுறவுத்தின விழாவை யாழ் மாவட்டத்திலுள்ள 72 கூட்டுறவுச் சங்கங்கள் இணைந்து கொண்டாடவுள்ளன.

யாழ் மாவட்டக் கூட்டுறவுச்சபை இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

கோட்ட, மாவட்ட மட்டத்தில் நடைபெறவுள்ள இவ் விழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள், அங்கத்தவர்கள், பணியாளர்கள், பணிப்பாளர்கள், பொதுமக்கள் ஆகியோர் பங்குபற்றுவதற்கேற்ற வகையில் கலை, கலாசார விளையாட்டு, கட்டுரை, பேச்சு, மாட்டுவண்டிச் சவாரி, நடனப் போட்டிகள் இம்மாவட்டத்திலுள்ள ஆறு கோட்டங்களுக்கிடையேயும் மாவட்ட மட்டத்திலும் நடத்தப்படவுள்ளன.

அடுத்த மாதம் 26 ஆம் திகதி மாவட்ட மட்ட இறுதி நாள் நிகழ்ச்சிகள் நடைபெறும். (14)

# சூரிய சக்தியை கிரகிக்கும் கண்ணாடி வீடுகள்!

ஜேர்மனியில் சூரிய சக்தியை கிரகிக்கும் கண்ணாடி ஓடுகளைக் கொண்ட வீடுகளை தற்போது தயாரித்து வருகிறார்கள்.

இக்கண்ணாடி ஓடுகள் வீட்டிற்குத் தேவையான மின்சாரத்தைச் சேமித்து வழங்குகின்றன

ஜேர்மன் நாட்டின் அரசினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள இவ்வீட்டின் விலை 5 இலட்சம் மார்க்குகள் ஆகும் (15)

# மொனறாகல பாடசாலைகளுக்கு 10 தினங்கள் விடுமுறை!

வத்தளையில் நடைபெறவுள்ள கம் உதாவ-92' கொண்டாட்டங்களை முன்னிட்டு மொனறாகல மாவட்டத்திலுள்ள 19 பாடசாலைகள் யூன் மாதம் 23 ஆம் திகதி முதல் ஜூலை 3 ஆம் திகதிவரை மூடப்படவுள்ளன.

கம்உதாவ கொண்டாட்டங்களுக்காக இவ்வாறு பாடசாலைகள் மூடப்படுவதனால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதாக சபையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

# வடக்கு, கிழக்குப் பகுதிகளில் 11 லிகிதர்களுக்குப் பதவியுயர்வு

வடக்கு, கிழக்குப்பகுதிகளின் உள்ளூராட்சி மன்றங்களில் பணிபுரியும் பதினொரு லிகிதர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

வடக்குக் கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் இவர்களை முதலாந்தர லிகிதர்களாகப் பதவி உயர்த்தியுள்ளது. (11)

# தென். லெபனான் மீது இஸ்ரேலிய விமானம் தாக்குதல்

இஸ்ரேலிய யுத்த விமானமொன்று லெபனானின் தென் பகுதியில் பிரவேசித்து ஹிஸ்புல்லா கெரில்லா நிலைகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் கூறின.

நேற்றுமுன்தினம் மாலை தென், லெபனானில் உள்ள கிராமம் ஒன்றின் மீது இத் தாக்குதல் இடம் பெற்றது.

# கே. ஜி. பியிடமிருந்து நாம் நிதியுதவி பெறவில்லை

- அமைச்சர் ரணில்

முன்னாள் சோவியத் ரஷ்ய உளவு அமைப்பான கே. ஜி. பியிடமிருந்து ஐக்கிய தேசியக்கட்சி நிதியுதவி பெற்றுள்ளதாக இந்துப்பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியை அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மறுத்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் பத்திரிகையாளர்களிடம் பேசிய அவர் ஐக்கிய தேசியக் கட்சி கே. ஜி. பியிடமோ அன்றேல் ஏனைய வெளிநாட்டு வட்டாரங்களிலிருந்தோ நிதியுதவி எதனையும் பெறவில்லையென மறுத்தார்.

# சாரணர் வேலை வாரம் 20ஆம் திகதி ஆரம்பமாகிறது

இவ்வாண்டுக்கான சாரணர் வேலைவாரம் இன்று 20 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை நடைபெறும்.

சாரணர்களும், குருளைச் சாரணர்களும் சாரணர் இயக்கத்திற்கு நிதி திரட்டுவதற்காக அந்த வாரத்தில் பல் வேறு வேலைகளில் ஈடுபடுவர்

தேசிய சாரணர் பாசறை ஆகஸ்ட் மாதம் குருநாகலில் நடைபெறவுள்ளது.

# சட்டத்தை இயற்றுபவர்கள் அரசியல்வாதிகள்; பொலிஸாரல்ல

-ஹட்சன் சமரசிங்க

சட்டத்தை இயற்றுபவர்கள் அரசியல் வாதிகள். அதனை முறையாக அமுல் நடத்தும் பொறுப்பு மட்டுமே பொலிஸாருக்கு உண்டு சட்டத்தைக் கையிலெடுத்துக் கொண்டு பொலிஸார் செயற்பட அனுமதிக்கக்கூடாது

இவ்வாறு நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் கொழும்பு மாவட்ட ஐ தே. கட்சி உறுப்பினர் ஹட்சன் சமரசிங்க உரையாற்றுகையில் கூறினார்.

இதனாற்றான் பொலிஸ் சேவைக்கு ஆட்களைத் தெரிவு செய்யும்போது உடம்பையும் உயரத்தையும் மட்டும் கவனத்திற்கெடுக்காது அவர்களின் தலையையும் கவனிக்க வேண்டுமெனத் தான் கோருவதாகவும் அவர் தெரிவித்தார்.

# சங்கர் தயாள்சர்மாவின் வேட்புமனு நேற்று தாக்கலானது

இந்திய ஜனாதிபதி தெரிவுக்கான காங்கிரஸ் ஐ வேட்பாளராகத்தனது வேட்புமனுவை தற்போதைய உப ஜனாதிபதி டாக்டர் சங்கர் தயாள் சர்மா நேற்று சமர்ப்பித்தார்.

இவரின் சார்பில் இரண்டு வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன

அதில் ஒன்றை மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் அர்ஜுன் சிங்கும் மற்றையதை மத்திய நலத்துறை அமைச்சர் சீதாராம் கேசரியும் தாக்கல் செய்தனர்

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா உட்பட வெவ்வேறு மாநில முதலமைச்சர்கள் டாக்டர் சர்மாவின் மனுவை முன்மொழிந்தும், வழிமொழிந்தும் உள்ளனர்

இதற்காக முதல்வர் ஜெயலலிதா நேற்றுக்காலை சென்னையிலிருந்து டில்லிக்குச் சென்றிருந்தார்

72 வயதான டாக்டர் சங்கர் தயாள் சர்மா உப ஜனாதிபதியாக பதவி வகித்த கடந்த ஐந்து வருட காலத்தில் எதிர்க்கட்சிகளின் நன்மதிப்பைப்பெற்றவர்

# இந்திய ராஜ்ய சபாவுக்கு போட்டியின்றி 16பேர்தெரிவு

இந்தியாவில் மத்திய பிரதேசம், பஞ்சாப், தமிழ்நாடு, ஒரிஸா ஆகியவற்றிலிருந்து 16 வேட்பாளர்கள் போட்டியில்லாமலேயே ராஜ்ய சபாவுக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தமிழ் நாட்டிலிருந்து காங்கிரஸ் ஐ. க சியைச் சேர்ந்த திருமதி ஜெயந்தி நடராஜனும், அ. தி. மு. க. வைச் சேர்ந்த ஜி. சுவாமிநாதன், எஸ். முத்துமணி, வி, இராஜன் செல்லப்பா, அதிரின் சாம் ஜோண், எம். தங்கராஜ் பாண்டியன் ஆகியோரும் ராஜய சபாவுக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

ராஜ்ய சபா தேர்தல் அடுத்த செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# நவாப்ஷெரிப் அரசை பதவிவிலகக் கோரிக்கை

பாகிஸ்தானில் நவாஸ் ஷெரிப் அரசை பதவி நீக்க வேண்டுமென எதிர்க்கட்சிகள் கோரியுள்ளன.

கராச்சியில் கூடிய முக்கிய 17 எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் தற்போதைய அரசாட்சியில் நீடிக்கும் வரை சிந்து மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகளினால் பயன் ஏற்படாது எனவும் தெரிவித்துள்ளார்கள்.

# இந்திய ஜனாதிபதித் தேர்தல்

## சாதியம் மற்றும் பிராந்திய தாக்கங்கள்

இந்திய ஜனாதிபதித் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் வேட்பாளரின் பெயர் பற்றி எதுவும் பிரஸ்தாபிக்காமல் எதிர்க்கட்சிகளுடன் கலந்தாலோசிப்பதாகக் கூறப்பட்ட பிரதமர் நரசிம்மராவ் உப ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மாவின் பெயரை இந்திரா காங்கிரஸ் வேட்பாளரெனப் பிரகடனப்படுத்தியுள்ளார்.

பிற்பட்டோர் வகுப்பைச் சேர்ந்த ஒருவரே ஜனாதிபதி பதவிக்கு நியமிக்கப்படவேண்டுமென ஜனதாதளக் கட்சியின் தலைவர்கள் வி பி சிங், ராம் விலாஸ் பஸ்வான் முதலானோர் தீவிரமாகப் பிரசாரம் செய்தனர்.

பிற்பட்டோர் வகுப்பைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களும் சட்டமன்ற உறுப்பினர்களும் கூட இதே கோரிக்கையை விடுத்தனர்.

ஆனால் பிராமணரான நரசிம்மராவ் பிராமணரான சங்கர் தயாள் சர்மாவைத் தெரிவு செய்துள்ளார். இவரது பெயரை முன்மொழிய இன்னுமொரு பார்ப்பனரான தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவை பிரதமர் டெல்லிக்கு அழைத்து முன்மொழிய வைத்துள்ளார்.

சங்கர் தயாள் சர்மாவின் தெரிவை நரசிம்மராவ் சுலபமாக நியாயப்படுத்தக் கூடியதாக உள்ளதற்கான காரணம் அவர் உப ஜனாதிபதியாக இருப்பதே.

இந்த அடிப்படையிலான தெரிவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரும் மேற்குவங்காள முதலமைச்சருமான ஜோதிபாசு வரவேற்றிருக்கிறார்.

இந்திரா காந்தியின் காலத்தில் ஒரு முறையைத் தவிர உப ஜனாதிபதியையே ஜனாதிபதி பதவிக்குத் தெரிவு செய்வது ஒரு மரபாகவே இருந்து வந்துள்ளது அதே போல வட மாநிலத்தைச் சேர்ந்த ஒருவர் ஜனாதிபதியாக இருக்கும்போது தென் மாநிலத்தைச் சேர்ந்த ஒருவர் உப ஜனாதிபதியாக இருப்பதும் தென் மாநிலத்தைச் சேர்ந்த ஒருவர் ஜனாதிபதியாக இருக்கும்போது வட மாநிலத்தைச் சேர்ந்த ஒருவர் உப ஜனாதிபதியாக இருப்பதும் கூட இதுவரை கடைப்பிடிக்கப்பட்டு வந்த இன்னுமொரு மரபாகும்.

இந்திய ஜனாதிபதித் தேர்தலில் பாராளுமன்ற சட்டசபை உறுப்பினர்களே வாக்களிக்க உரித்துடையவர்கள். நாடுதழுவிய அளவில் இந்திரா காங்கிரஸுக்கு அறுதிப் பெரும்பான்மை இல்லையென்று கருதப்படுவதால் எதிர்க்கட்சிகளின் ஆதரவைப் பெற வேண்டிய நிர்ப்பந்தம் அக்கட்சிக்கு உண்டு. லோக சபை சபாநாயகர் தெரிவில் இவ்வாறான ஏற்பாட்டின் படியேதான் இந்திரா காங்கிரஸின் சிவராஜ பாட்டில் சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டார்.

*எஸ். ஜி. எம்.*

இந்த நிலையில் பாராளுமன்றமட்டத்திலும் மாநிலங்கள் மட்டத்திலும் அதிகளவு பலம்வாய்ந்த பாரதிய ஜனதாக்கட்சி இந்திரா காங்கிரஸின் தீர்மானத்துடன் ஒத்துப் போகவில்லை.

உப-ஜனாதிபதி பதவிக்கு எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒருவரே தெரிவு செய்யப்பட வேண்டும் எனக் கூறும் இக்கட்சி இதற்கு இடதுசாரிக் கட்சிகளின் ஆதரவைப்பெற முயல்கிறது.

எனவே வேட்பாளர் நியமனத்துக்கான கடைசித் தினமான ஜூன் இருபத்திநான்காம் திகதிவரை பாரிய அரசியல் நடவடிக்கை தொடரலாம் சிலசமயம் வேட்பாளர் வாபஸ் பெறுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட ஜூன் இருபத்தேழாம் திகதி வரையும் பேச்சுவார்த்தைகள் தொடரலாம் போட்டி ஏற்பட்டால் தேர்தல்கள் ஜூலை மாதம் பதின்மூன்றாம் திகதி நடைபெறும்.

உப-ஜனாதிபதியே பதவி வழியாக ராஜ்ய சபையின் தலைவராவார்- அப்படியான முக்கிய பதவிக்கு தெரிவு செய்யப்படவேண்டியவரின் பெயரை எந்தவொரு கட்சியும் இன்னும் வெளியிடவில்லை,

ஜனாதிபதி, உப-ஜனாதிபதி வேட்பாளர்கள் இரண்டுமே ஒரேயடியாகத் தீர்மானிக்கப்பட வேண்டுமென பி ஜே பி கூறுகிறது. ஆனால் இந்திரா காங்கிரஸ் கட்சியோ அவை வெவ்வேறானவை என்ற நிலையை எடுக்கிறது

சங்கர் தயாள் சர்மாவைப் பொறுத்தவரை கடந்த ஐந்து வருடங்களாக ராஜ்ய சபாவை பக்க சார்பின்றி கண்ணியத்தோடு வழி நடத்திச் சென்றதால் அவருக்கு எதிர்க்கட்சிகளின் ஆதரவு கணிசமான அளவு உண்டு. எனவே ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறக் கூடிய வாய்ப்புகள் அவருக்கே அதிகளவு உண்டு.

கட்சி அரசியலுக்கு அப்பால் நின்று பக்கச்சார்பின்றி தைரியமாகச் செயற்படவேண்டிய ஜனாதிபதி பதவிக்குரிய தகைமையை சங்கர் தயாள் சர்மா பெற்றிருப்பது அவருக்குள்ள சாதகமான புள்ளியாகும். ஜனாதிபதி பதவிக்கு ஒருவரது சாதி சமயம் என்பனவற்றிலும் பார்க்க இந்தத் தகைமையே முக்கியமென பல எதிர்க்கட்சிகள் கருதுகின்றன,

எவ்வாறாயினும் உப-ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகள் எடுக்கும் நிலை, இதுவரை பின்பற்றப்பட்ட மரபினை அடியொட்டியதாக இருக்குமா என்ற கேள்வி எழும்போது வடக்கு பிராந்தியத்தில் செல்வாக்குப் பெற்ற பி.ஜே.பி தென் பிராந்தியத்தைச் சேர்ந்த ஒருவரை உப-ஜனாதிபதி பதவிக்கு வேட்பாளராக நியமிக்குமா என்ற கேள்வி எழுகிறது ஆனால் காங்கிரஸ் கட்சி சில சமயம் மரபைப் பின்பற்றி தென் மாநிலங்களைச் சேர்ந்த ஒருவரை நியமிக்கலாம்.

எப்படித்தான் சாதி, சமய, பிராந்திய வேறுபாடுகள் இல்லையென முழங்கினாலும் தேர்தல் பதவி என்று வரும்போது அவை தமது செல்வாக்கைக் காட்டத்தான் செய்கின்றன என்பதையே இவை உணர்த்துகின்றன.

# நீதிமன்ற நடவடிக்கைகள் சிறைக்காவலர்களால் பகீஷ்கரிப்பு!

கொழும்பு மாளிகாகந்த நீதிமன்ற நடவடிக்கைகளைச் சிறைக்காவலர்கள் நேற்று முன்தினம் முதல் பகிஷ்கரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சிறைக்காவலர் ஒருவர் இந்த நீதிமன்றத்தினால் ஸ்ளக்கமறியலில் வைக்கப்பட்டதை ஆட்சேபித்தே இவர்கள் இப்பகிஷ்கரிப்பை மேற்கொண்டுவருகின்றனர்

இதனால் மாளிகாகந்த நீதிமன்ற நடவடிக்கைகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன வழக்கு விசாரணைகள் ஒத்திப்போடப்பட்டுள்ளன.

## தே.எண்ணெய் விநியோகம்

யாழ் ப. நோ. கூ சங்கம் தனது கிளைகளினூடாக ஒருவருக்கு இரண்டு லீற்றர் தேங்காய் எண்ணெயை லீற்றர் 45 ரூபா விலையில் விநியோகித்து வருகிறது. 47

## பேசாலைக்கு அன்புலன்ஸ்

பேசாலை வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வண்டி, மின்சார வசதி என்பன வழங்கப்படவுள்ளதாக மன்னார் அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

## உயர்தர மாணவர்க்கு கணக்கியல், வர்த்தகக் கருத்தரங்கு

மருதனார்மடம் கல்விக் கோட்ட வணிகவள நிலையம் கணக்கியல், வர்த்தகம் கற்கும் மாணவர்களுக்கான கருத்தரங்கினை நடாத்தி வருகின்றது.

இவ்வாண்டு க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும்மாணவர்களுக்கான இக் கருத்தரங்கு சென்ற வாரம் மானிப்பாய் கொத்தணி மாணவர்களுக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இக் கோட்டத்தில் உள்ள ஏனைய கொத்தணிகளின் மாணவர்களுக்கும் இதனை நடாத்த ஒழுங்குகள் செய்யப்படுவதாக சேவைக்கால ஆலோசகர் தெரிவித்தார். 37

## படித்த யுவதிகளுக்கு கோப்பாயில் தையல் பயிற்சி

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையாக கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக் கிளையில் தையல் பயிற்சி நிலையம் ஒன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த தையல் பயிற்சி நிலையத்தில் படித்துவிட்டு வேலையற்றிருக்கும் யுவதிகள் சுய தொழில் வாய்ப்பைப் பெறும் முகமாக இப்பயிற்சி மேற்கொள்ளப்பட விருக்கின்றது.

இப்பயிற்சிக்கு ஒவ்வொரு கிராமசேவையாளர் பிரிவில் இருந்தும் ஐந்து பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இப்பயிற்சிக்கு சேரவிரும்பும் யுவதிகள் தமது விண்ணப்பங்களை செயலாளர் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக் கிளைக்கு உடன் விண்ணப்பிக்கும்படி கேட்கப் பட்டுள்ளனர். 6

## இந்திய அமைச்சரவை விஸ்தரிக்கப் படலாம்

இந்திரா காங்கிரஸ் கட்சி ஜனாதிபதி தேர்தலுக்கான தனது வேட்பாளராக உப-ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மாவின் வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து இந்திய மத்திய அமைச்சரவை விஸ்தரிக்கப் படலாம் எனத் தெரியவருகிறது.

ஜப்பானுக்கு நான்கு நாள் விஜயமாகப் புறப்படுவதற்கு முன் இன்று அல்லது நாளை பிரதமர் நரசிம்மராவ் அமைச்சரவை விஸ்தரிப்பைச் செய்யலாம் எனக் கூறப்படுகிறது.

தமிழகத்தைச் சேர்ந்த வாழப்பாடி ராமமூர்த்தி மீண்டும் அமைச்சராகலாம் எனவும் ப. சிதம்பரத்துக்கு முக்கிய பொறுப்பு கிடைக்கக் கூடுமெனவும் ஊகிக்கப்படுகின்றது.

## யாழ். பெரியாஸ்பத்திரிக்கு புதிய ஜெனரேட்டர் வந்தது

யாழ் பெரியாஸ்பத்திரிக்கு மீண்டும் ஒரு ஜெனரேட்டர் குமண கப்பலில் எடுத்து வரப்பட்டிருக்கிறது.

10 கே.வி வலுக்கொண்ட இந்த ஜெனரேட்டர் இவ்வருடத்தில் யாழ் பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

அண்மைக்காலமாக இயங்கி வரும் 45 கே.வி வலு ஜெனரேட்டருக்கு உதவியாக இது இயங்கும் என வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. 07

## பொலிஸ்காரர் கடமை பற்றி சபையில் அரச தரப்பு எம். பி.

சட்டத்தை அமுல்செய்ய வேண்டிய பொலிஸ்காரர் சட்டத்துக்கு மாறாக நடந்து கொள்கிறார்கள்.

இவ்வாறு கொழும்பு மாவட்ட ஐ.தே.க. எம்.பியான ஹட்சன் சமரசிங்க பாராளுமன்றத்தில் கூறினார்.

அவசரகாலச்சட்ட விவாதத்தில் பேசிய அவர் சில பொலிஸ்காரர் தாம் நினைத்ததை எல்லாம் செய்கிறார்கள் எனவும் குறிப்பிட்டார்.

## கால்நடை வளர்ப்புக்கு 40 ஆயிரம் ரூபா கடன் உதவி

புத்தளம் கலட்டி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் 31 அங்கத்தவர்களுக்கு கால்நடை வளர்ப்புக்காக நாற்பதாயிரம் ரூபா கடனாக வழங்கப்பட்டது.

மாடு வளர்ப்புக்கு தலா 1500 ரூபாவும், ஆடு வளர்ப்புக்கு தலா 500 ரூபாவும் கடனாக வழங்கப்பட்டது.

அகில உலக தரிசன நிறுவனம் வழங்கிய அபிவிருத்தி நிதியத்தில் இருந்து இக்கடன் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரால் நேற்று வழங்கப்பட்டது.

★ சபையில் சுதந்திரக்கட்சி எம். பி.

## கொழும்பில் வெள்ளம் வர அரசாங்கமே பொறுப்பு

கொழும்பில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் சரியாக வழங்கப்படவில்லை என பாராளுமன்றத்தில் அரச தரப்பு எம்.பிக்களும், எதிர்க்கட்சி எம்.பிக்களும் தெரிவித்தனர்.

கொழும்பில் எதிர்காலத்தில் வெள்ளப் பெருக்கு ஏற்படாதவாறு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

முறையான வடிகால் அமைப்பு இல்லாததே அண்மையில் வெள்ளப்பெருக்கு ஏற்படக் காரணம் என சுதந்திரக்கட்சி எம்.பிக்கள் சிலர் குற்றம் சாட்டினர்.

## ஆப்கானில் இந்தியர் மீது அதிக கெடுபிடி

ஆப்கானிஸ்தானில் தீவிர இஸ்லாமிய குழுக்கள் அரசாங்கம் அமைத்ததைத் தொடர்ந்து அங்கு வசிக்கும் இந்தியப் பிரஜைகளை இம்சித்து வருவதாக தெரிவிக்கப் படுகிறது.

அதிகமாக துன்புறுத்தப் படுபவர்கள் இந்துக்களும் பஞ்சாப் இந்துக்களுமே எனத் தெரிவிக்கப்படுகிறது. இவர்களின் வர்த்தக ஸ்தாபனங்கள் சிலவும் சூறையாடப் பட்டுள்ளன.

இந்துப் பெண்களாயினும் வீதியில் செல்லும்போது இஸ்லாமிய உடை அணிந்து செல்லுமாறு எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் லட்சுமி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 20-06-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

## குமிழமுனை மக்கள் சொந்த இடம் திரும்பினர்

அண்மையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள குமிழமுனைப்பிரதேசத்தின் மீது படையினர் மேற்கொண்ட மும்முனைத் தாக்குதலையடுத்து பாதுகாப்புத்தேடி அப்பகுதியிலிருந்து பெருந்தொகையான மக்கள் இடம் பெயர்ந்தனர். தற்போது குமிழமுனைப் பிரதேசத்தில் அமைதி நிலவிவருவதனால் வெளியேறிய மக்கள் சொந்த இடத்திற்குத் திரும்பிவருகின்றனர்.

குமிழமுனைப்பிரதேசமக்கள் பெரும்பாலானோர் மீன்பிடித் தொழிலையும், விவசாயத் தொழிலையும் மேற்கொண்டு வருபவர்களாவர்.

படையினர் மேற்கொண்ட மும்முனைத் தாக்குதல்களால் குமிழமுனையைச்சேர்ந்த மக்கள் சேகரித்துவைத்திருந்த நெல், உழுந்து, நிலக்கடலை, கருவாடு, வெங்காயம், மிளகாய் ஆகிய உற்பத்திப் பொருள்கள் சேதமடைந்துள்ளதாக அங்கிருந்துவருபவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதத்திலும் படையினரால் இப்பகுதிமீது மேற்கொள்ளப்பட்ட குண்டுவீச்சு, ஷெல் தாக்குதல்களால் உற்பத்திப் பொருள்கள் சேதமடைந்ததும் குறிப்பிடத்தக்கது. (07)

### திணைக்கள தலைவர் கூட்டம்

"யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சகல திணைக்களத் தலைவருக்குமான கூட்டமொன்று எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு திணைக்களத்தலைவர்கள் சகலரும் தவறாது கலந்துகொள்ளுமாறு மாவட்ட ஆணையாளர் அறிவித்துள்ளார்.

### கட்டுப்பாடின்றி சீனி விற்பனை

யாழ்ப்பாணம் ப.நோ.கூ. சங்கம் தனது கிளைகளில் சீனியை கிலோ 27 ரூபாவாக கட்டுப்பாடின்றி விற்பனை செய்துவருகிறது.

இதேபோல ஏனைய அத்தியாவசிய பொருள்களும் நிர்ணயிக்கப்பட்ட விலையில் விற்கப்படுகிறது. (47)

### மீண்டும் மண்எண்ணெய்

கடந்த 17 ஆம் திகதி மாயமாய் மறைந்திருந்த மண்ணெண்ணெய் மீண்டும் வீதியோரங்களிலும் கடைகளிலும் விற்பனைக்கு வந்துள்ளது. (07, 47)

### இரவு நேரம் சூடு

பூநகரி - கல்முனை பகுதியில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினர் நேற்று முன்தினமிரவு யாழ் கரையோர பகுதிகளை நோக்கி சுலிபர் தாக்குதலை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

### அவுஸ்திரேலியா...

அவுஸ்திரேலியாக் கடலில் பிடிக்கப்பட்ட மீன் ஒன்றிலேயே இந்த பற்றீரியா காணப்பட்டது.

### பதுக்கலுக்கு -

துறை பொறுப்பாளர் பதுக்கலில் ஈடுபடுபவர்கள் கண்டுபிடிக்கப்பட்டால் அபராதம் விதிக்கப்படுவதுடன் அவர்கள் சிறிது காலம் தடுத்தும் வைக்கப்படுவர் எனவும் எச்சரித்துள்ளார்.

### இனப்...

நிலையில் தெரிவுக்குழு தனது இடத்தை இப்போது வெளியிட்டுள்ளது.

பாராளுமன்றத் தெரிவுக் குழு இனப்பிரச்சினை தொடர்பாக செய்யும் சிபார்சுகளை அரசு அப்படியே அமுல்செய்யும் எனக் கடந்த புதன் அமைச்சரவை செய்தியாளர்களிடம் கூறியது இங்கு குறிப்பிடத்தக்கது.

## உணவு முத்திரையைப்பெற தினமும் அலையும் ஏழைகள்

குடாநாட்டில் வறுமையில் வாடும் ஏழைகளுக்கு அரசாங்கம் வழங்கும் உணவு முத்திரையை விநியோகிப்பதில் சில அதிகாரிகள் அசட்டையீனமாக நடந்து கொள்வதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனால் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்கும் கிராம சேவையாளரிடமும் ஏழை மக்கள் தினமும் அலைந்து திரிவதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒரு உணவு முத்திரையைப் பெறுவதற்கு பல வாரங்கள் செல்வதாக இவர்கள் தெரிவித்தார்கவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. 47

## 55 வீதமான குழந்தைகளுக்கு போஷாக்கு இல்லை

இலங்கையில் 12 வயதுக்கு குறைந்த குழந்தைகளில் 55 சதவீதமானோர் போஷாக்கு இன்றி உள்ளனர் என சுதந்திரக்கட்சியின் ரிச்சர்ட் பத்திரன எம்.பி. பாராளுமன்றத்தில் நேற்றுக் கூறினார்.

வடக்கு கிழக்கு யுத்தம் காரணமாக பொருள்களின் விலை உயர்த்தப்படுவதாக கூறுகிறீர்கள். இந்த நிலையில் பாவனையாளர் பாதுகாப்புச் சட்டம் தேவையா எனவும் அவர் கேட்டார்.

## வாழ்க்கைசெலவு அதிகரிப்பு சபையில் எதிர்க்கட்சி எம்.பி.

1952 முதல் 1977 வரை 25 வருடத்துக்குக் கூடிய வாழ்க்கைச்செலவுப் புள்ளி 108.3 மட்டுமே 1977 முதல் 1992 வரை 15வருடத்துக்கு 69 சதவீதம் உயர்ந்துள்ளது. இதனையிட்டு அரசுக்கு எவ்வித அக்கறையும் இல்லை.

இவ்வாறு ஐக்கிய சோஷலிச எம்.பி. அதாவுட செனிவிரட்ன பாராளுமன்றத்தில் நேற்றுக் கூறினார்.

மரக்கறி கிலோ 40ரூபா அரைச் சாப்பாடு 20 ரூபா இவ்வாறு பல பொருள்கள் உயர்ந்துள்ளன எனவும் அவர் சொன்னார்

## நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் பாராளுமன்றத்தில் திருத்தம்

1979 ஆம், 1979 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தில் நேற்று பாராளுமன்றத்தில் திருத்தம் கொண்டு வரப்பட்டது.

இதன்படி பொருள்களில் குறிக்கப்பட்ட உண்மையான விலையை அழிப்பது திருத்தம் செய்வது மாற்றுவது விலை லேபல்களை சேதமாக்குவது என்பது குற்றமாகக் கருதப்பட்டு தண்டனையும் அபராதமும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

பொருள்களின் விலை உயரும்போது பழைய விலைக்கு வாங்கிய பொருள்களை வியாபாரிகள் மாற்றி விற்க முடியாது.

★ சபையில் தினேஷ்

## வானிலை அவதான நிலையம் சரியாகச் செயற்படவில்லை

கொழும்பிலுள்ள வானிலை அவதான நிலையம் பெரும் மழை, வெள்ளம் குறித்து அறிந்திருக்கவில்லையா என மக்கள் ஐக்கிய முன்னணி எம்.பி தினேஷ் குணவர்த்தனா பாராளுமன்றத்தில் நேற்றுக் கூறினார்.

### கொம்படியில நீர் வற்றியுள்ளது

கொம்படிப் பாதையில் தற்சமயம் நீர் வற்றியுள்ளதாகவும் பிரயாணிகள் நடந்தே சென்று வருகின்றனர் எனவும் அங்கிருந்து வந்தவர்கள் தெரிவிக்கின்றனர் 15

### வெளி நாட்டு பத்திரிகையாளர்

யாழ்ப்பாணம் வந்துள்ள ஏசியா வீக் பத்திரிகை ஆசிரியர் ஜோண் கொலமி கனடிய தேசிய வானொலி ஆசியப்பகுதி ஆசிரியர் குரோபர் ஹெய்மேனன் ஆகியோர் பாதிக்கப்பட்டுள்ள வலிகாமம் வடக்குப் பகுதிகளை பார்வையிட்டனர்

இவர்கள் விடுதலைப் புலிகளின் பிரமுகர்களையும் சந்தித்துப் பேசவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 07

### வெள்ள நிவாரணம்

தெற்கில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ ஒரு லட்சம் பவுன்ஸ்க்கும் மேலான நிதி தேவைப்படுவதாக ஜெனிவாவில் உள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

### நிவாரணம் இல்லை

வெள்ள நிவாரணம் வழங்கும்போது 1500 ரூபாவுக்கு கூடிய வருமானம் உள்ளவர்களுக்கு நிவாரண உதவி இல்லை என கொழும்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பாதிக்கப்பட்டவர்கள் ஜனாதிபதிக்கும், சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கும் புகார் செய்துள்ளனர். 32